## தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பு

வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் இரண்டாவது முன் கூட்டிய மதிப்பீடுகளின் படி 2019-20 ஆம் ஆண்டில் நம் நாட்டில் தேங்காய் 21.53 இலட்சம் ஹெக்டரில் 146.95 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். தமிழகத்தில் 4.37 இலட்சம் ஹெக்டரில் 37.01 இலட்சம் டன்கள் தேங்காய் (2019-20) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தேங்காய் முக்கியமாக கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது.

பெருந்துறை சந்தைக்கு தேங்காய் வரத்தானது இப்பருவத்தில் கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 2021 ஜனவரி இறுதியில் மற்றும் பிப்ரவரி மாதங்களில் வர தொடங்கும். நல்ல பருவமழையின் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது தேங்காய் உற்பத்தி அதிகரித்தாலும், அதிக வரத்து காரணமாக அடுத்த இரண்டு மாதங்களில் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 20 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரை விலையினை ஆய்வு செய்தது. மேலும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு விற்பனை மையத்தில் சந்தை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் பிப்ரவரி- மார்ச், 2021 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ.33முதல் ரூ 35வரை இருக்கும் எனவும் மற்றும் நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ.100 முதல் ரூ105 வரை இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டின் முக்கிய உற்பத்தி மையங்கள் மற்றும் பிற மாநிலங்களிருந்து வரும் வரத்தை பொறுத்து

விலையில் மாற்றம் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003*

*தொலைபேசி -0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*

*வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள்துறை*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003.*

*தொலைபேசி எண் -0422-6611284*

**Price forecast for Coconut and Copra**

According to the second Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare, the area under coconut in the country is 21.53 lakh hectares with a production of 146.95 lakh tones during 2019-20. The major coconut producing States are Kerala, Karnataka, Tamil Nadu and Andhra Pradesh. Tamil Nadu State produced 37.01 lakh tonnes of coconuts in 4.37 lakh hectares in 2019-20. In Tamil Nadu, coconut is mainly cultivated in Coimbatore, Tiruppur, Thanjavur, Dindigul and Kanyakumari districts.

The seasonal arrivals of copra to Perundurai market from Kerala, Karnataka, and from various regions in Tamil Nadu will commence from the end of January and February 2021. The good monsoon has resulted in boosting the coconut production in this season when compared to last year. Even though festival season in upcoming months might enhance the demand, prices are expected to slightly reduce due to the higher arrivals in the next two months.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 20 years prices for coconut and copra that prevailed at Avalpoonthurai Regulated Market of Erode district and Perundurai Cooperative Marketing Society. As per the results of the analysis, the farm gate price of good quality coconut during February-March, 2021 will be Rs. 33-35 per kg. Good quality copra price will be around Rs. 100-105 per kg and the price fluctuation would be subjected to the variations in the arrivals from the major production centres in Tamil Nadu and other States. Hence, farmers are advised to take selling decision accordingly.

***For further details contact***

*Domestic and Export Market Intelligence Cell*

*Centre for Agricultural and Rural Development Studies*

*Tamil Nadu Agricultural University*

*Coimbatore – 641 003.*

*Phone: 0422-2431405*

***For technical details please contact***

*Professor and Head*

*Department of Spices & Plantation Crops*

*Tamil Nadu Agricultural University*

*Coimbatore -641003.*

*Phone -0422 -6611284*